**O.S.No.400/2013**

**Date:09/07/2019**

**வா.சா-1 திரு.கோபாலகிருஷ்ணன், த.பெ.மீனாட்சி கோன்**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இனாம் பத்திரம் 227 ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இனாம் சர்வே எண்.569 என்பது 456 ஏக்கர் 31 சென்ட் அடங்கியது என்றால் சரிதான். என் அம்மா பெயரில் பட்டா எண்.2943-ஐ 2012-ம் வருடம் மாற்றியுள்ளேன் என்றால் நான் மாற்றவில்லை, வருவாய் துறையினர் மாற்றியுள்ளனர். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் கட்டுப்பட்ட சொத்து தான் பட்டா எண்.2943-ல் கட்டுப்பட்ட சொத்து என்பதை காட்ட வருவாய் துறையினரிடமிருந்து ஒப்புமை சான்று (Correlation certificate) ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, ஆனால் அந்த சொத்து தான் பட்டா எண்.2943-ல் கட்டுப்பட்ட சொத்தாகும். என் அம்மா பெயருக்கு முன்னால் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் கோரிப்பாளையம் பள்ளிவாசலின் பெயரில் இனாம் சொத்தாக இருந்தது. அந்த பட்டா மாறுதல் உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, பட்டா தாக்கல் செய்துள்ளேன். 2012-ல் என் அம்மா பெயரில் பட்டா வாங்கி, அதற்கு பின்னர் என் அம்மா வாதிகள் பெயரில் தான செட்டில்மென்ட் எழுதினார் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2012-ம் ஆண்டிற்கு முந்தைய வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது சொத்தில் என்னென்ன மரங்கள் வைத்துள்ளேன் என்றால் தென்னைமரம், பப்பாளி, மாமரம் ஆகியவை வைத்திருந்தேன். அது தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். 2012-ம் வருடத்திற்கு முன்பு உள்ள அடங்கல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிராது சொத்தில் வேறு என்னென்ன உள்ளது என்றால் போர், மோட்டார் மற்றும் ஓட்டு வீடு உள்ளன. அந்த வீட்டில் யார் குடியிருக்கிறார் என்றால் கடம்பன் மகன் மலைச்சாமி வகையறா குடியிருக்கிறார்கள். எத்தனை வருடங்களாக குடியிருக்கிறார்கள் என்றால் 10 வருடங்களுக்கு மேல் குடியிருக்கிறார்கள். அந்த வீடு தொடர்புடைய ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் வீடு மற்றும்

**O.S.No.400/2013, Date:09/07/2019, வா.சா-1 திரு.கோபாலகிருஷ்ணன், த.பெ.மீனாட்சி கோன்**

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மின்சார இணைப்பு ஆகியவை கடம்பன் வகையறாவின் பெயரில் உள்ளது, தற்போது அவர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டோம். தற்போது என்றால் எந்த வருடத்தில் 2015, 2016 வருடத்தில். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது வழக்கு சொத்து விபரத்தில் அந்த வீட்டை நான் குறிப்பிடவில்லை என்றால், சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை பிராதில் குறிப்பிட்டுள்ளேன். நான் முழு சொத்து விபரத்தையும் இந்த வழக்கில் காட்டாத காரணத்தினாலும், குறைந்த அளவில் நீதிமன்ற கட்டணம் செலுத்தியதாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அந்த ஓட்டு வீடு 3-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், மலைச்சாமிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றாலும் சரியல்ல. மலைச்சாமிக்கும், 3-ம் பிரதிவாதிக்கும் என்ன உறவு முறை என்றால் உறவினர், ஒரே ஊர் மற்றும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள். 03.10.2013 அன்று பிரதிவாதிகளால் எனக்கு இடைஞ்சல் ஏற்பட்டது என்பதை காட்ட போலீஸில் கொடுக்கப்பட்ட புகார் அல்லது ஏதேனும் ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மேலவளவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், அவர்கள் ரசீது கொடுக்கவில்லை, அப்போது மேலவளவு ஊரில் எந்த கடையிலும் நகல் எடுக்க கடை இல்லை. நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பல பொது நல வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் பலமுறை தேர்தலில் போட்டியிட்டுள்ளேன் என்றால் சரிதான், நான்கு முறை சட்டமன்ற தேர்தலிலும், இரண்டு முறை பாராளுமன்ற தேர்தலிலும் போட்டியிட்டுள்ளேன். நான் தேர்தலில் போட்டியிட்ட சமயங்களில் எனது சொத்து விபரத்தை தாக்கல் செய்தேனா என்றால் காட்டியிருந்திருப்பேன், அந்த விபரங்கள் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் மேற்படி தேர்தல்களில் நான் போட்டியிட்ட போது நான் தாக்கல் செய்த ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 02.10.2013-ல் குறிப்பாக எந்த இலக்க பிராது சொத்தில் நுழையும் போது பிரதிவாதிகள் என்னை தடுத்தார்கள் என்றால் 13 இலக்க சொத்துக்களும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் தான் உள்ளன, அவை சிறிய சொத்துக்கள் தான் அவற்றில் மொத்தமாக நுழையும் போது தான் பிரதிவாதிகள் என்னை தடுத்தார்கள்.

**O.S.No.400/2013, Date:09/07/2019, வா.சா-1 திரு.கோபாலகிருஷ்ணன், த.பெ.மீனாட்சி கோன்**

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

13 இலக்க சொத்துக்களில் எந்தெந்த தரப்பினர் எந்த சொத்துக்களுக்கு பிரச்சனை செய்கிறார் என்றால் எல்லா சொத்துக்களுக்கும் அனைத்து பிரதிவாதிகளும் சேர்ந்து இடைஞ்சல் செய்கிறார்கள். வழக்கு சொத்தில் வல்லாளபட்டி மற்றும் கிடாரிபட்டி கிராமங்களை சேர்ந்த சொத்துக்கள் உள்ளன என்றால் சரியல்ல. வல்லாளப்பட்டி கிராமத்தை சேர்ந்த சொத்துக்கள் மட்டும் தான் உள்ளன. 1 முதல் 5 பிரதிவாதிகள் இரத்த உறவு முறைகள் அல்ல என்றால் தெரியாது, அவர்கள் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்று மட்டும் தெரியும். நானும் பிரதிவாதிகளின் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் ஆகியோர் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை மட்டும் தாங்கள் காப்பற்ற முயற்சி செய்கிறார் என்றால் சரியல்ல. நீதிமன்ற கட்டணத்தை குறைக்கும் எண்ணத்தில் பிற பிரதிவாதிகளையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தான் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் அனுபவத்தில் இருப்பதால் நான் அவர்களுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க இயலாது என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவத்தில் இருக்கிறோம். 1-ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரரர்களான முத்துராமன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்கள் வழக்கு சொத்தை பதிவு செய்யப்பட்ட கிரையத்தின் மூலம் 03.12.1971-ம் ஆண்டு வாங்கியதால் முத்துராமன் மற்றும் ராஜேந்திரனை தரப்பினர்களாக சேர்க்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் அவர்கள் எந்த உரிமையும் கோரவில்லை என்பதாலும், அவர்கள் அந்த கிரையத்தின்படி வேறு புல எண்ணை கிரையம் வாங்கியதாலும், அவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. புல எண்.830/3, புல எண்.830/5-ல் காட்டப்பட்ட சொத்துகளுக்கான உரிமையாளர்களை நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அந்த சொத்துக்கள் என் சொத்துக்கள் அதனால் வேறு யாரையும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. என் அம்மாவிற்கு தற்போது என்ன வயது என்றால் 70 வயது இருக்கும். வழக்கு சொத்துக்கள் என் அம்மாவிற்கு அவரது திருமணத்தின் போது சீதனமாக கொடுக்கப்பட்டது என்று நான் சொல்லியிருந்தேன் என்றால் திருமணத்தின் போது என் அம்மாவிற்கு கொடுக்கப்படவில்லை,

**O.S.No.400/2013, Date:09/07/2019, வா.சா-1 திரு.கோபாலகிருஷ்ணன், த.பெ.மீனாட்சி கோன்**

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

திருமணத்திற்கு பின்னர் நான் பிறந்த பின்னர் தான் என் அம்மாவிற்கு வழக்கு சொத்தை சீதனமாக என் அம்மாவின் தாத்தா நல்லகருப்பகோனார் மகன் ஒய்யப்பகோனார் கொடுத்தார். என் பிறந்த தேதி என்ன என்றால் 25.09.1977. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் அசல் ஆவணங்கள் எங்கே என்றால் எனக்கு தெரியாது, என் அம்மாவின் தாத்தா ஒய்யப்பகோனாருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் காட்டப்பட்ட சொத்தும், வழக்கு சொத்தும் வெவ்வேறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் அதன் உண்மையான உரிமையாளர்களிடம் உள்ளது என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதிக்கும், எனக்கும் வழக்கு சொத்து சம்மந்தமாக நிறைய பிரச்சனை ஏற்பட்டு எங்கள் இருவர் மீதும் குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் காழ்ப்புணர்ச்சி காரணமாக என்மீது குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. நான் வழக்கு சொத்து தொடர்பான குற்றவியல் வழக்கில் 70 நாட்கள் சிறையில் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேலவளவு காவல் நிலைய குற்ற எண்.288/2016 தொடர்பாக முன் ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, குற்ற எண். 288/2016 1-ம் பிரதிவாதி மீது நான் கொடுத்த புகார் ஆகும். என்மீது போலீசாரால் குற்ற பட்டிகை (History Sheeter) திறக்கப்பட்டு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என்றால் காவல் துணை கண்காணிப்பாளர் மணிரத்னம் என்மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக என் புகார் மீது 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மீது பதியப்பட்ட குற்ற எண்.4/2013 என்ற மேலவளவு காவல்நிலைய குற்ற வழக்கை வைத்துக் கொண்டு என்னை ரவுடி பட்டியலில் சேர்த்தார், ஆனால் பின்னர் மாவட்ட கண்காணிப்பாளரிடம் நான் மனு கொடுத்து அது ரத்து செய்யப்பட்டுவிட்டது. 2012-ம் ஆண்டிற்கு பின்னர் நான் ஏற்படுத்திய வருவாய் ஆவணங்களை ரத்து செய்யக்கோரி மாவட்ட வருவாய் அலுவலர் முன்பு நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கும், வழக்கு சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், வழக்கை சொத்தை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 2012-ம் ஆண்டிற்கு பின் தேதியிட்டு வருவாய் ஆவணங்களை உற்பத்தி செய்து அதன் அடிப்படையில் இந்த

**<u>O.S.No.400/2013, Date:09/07/2019, வா.சா-1 திரு.கோபாலகிருஷ்ணன், த.பெ.மீனாட்சி கோன்</u>**

**<u>1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

<u>4-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

4-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

<u>மறு விசாரணை</u>

இல்லை.